**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.72/2015**

**வழக்கு சாட்சி: PW.3**

**தேதி: 15.06.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **மலைச்சாமி** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **நாகமலை** | **தொழில்:** | **விவசாயம்** |
| **கிராமம்:** | **பனங்காடி** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **சிவகங்கை** | **வயது:** | **48/2023** |

(எதிரிகள் 1, 2 ஆஜர் இல்லை, 1, 2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3வது எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை:**

எனக்கு சொந்த ஊர் பனங்காடி கிராமம். நான் விவசாயம் செய்து பிழைத்து வருகிறேன். எதிரி செந்தில் எனது ஊர்காரர். மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவம் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். சம்பவம் சம்பந்தமாக எனக்கு ஞாபகமில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கவும் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றும் அவ்வாறு விசாரணை செய்யும் போது நான் 21.02.2013ம் தேதி காலை சுமார் 08.30 மணியளவில் எனது சொந்த வேலை காரணமாக நான் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்திற்கு வந்தேன் என்றும் அப்போது அங்கே எங்கள் ஊர் கிராம நிர்வாக அலுவலரும் கிராம உதவியாளரும் சேர்ந்து எங்கள் ஊரைச் சேர்ந்த முத்துராமலிங்கம் மகன் செந்திலுடன் நிலையத்திற்கு வந்தார்கள் என்றும் அங்கு சம்பவ வழக்கு சம்பந்தமாக செந்திலை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்து செந்தில் கொடுத்த வாக்குமூலத்தை என் முன்னிலையிலும் எங்கள் ஊர் கிராம உதவியாளர் நாராயணன் முன்னிலையிலும் ஆய்வாளர் விசாரிக்க செந்தில் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் நான் சொன்னேனா என்றால் இல்லை. என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றும் அவ்வாறு விசாரிக்கும் போது எதிரி

செந்தில் தானா முன்வந்து தானும் கோவானூர் கிராமத்தைச் சேர்ந்த திருமாஞ்சோலையில் வசிக்கும் சுப்பையா சேர்வை மகன் வெள்ளைச்சாமியும் செந்திலின் அக்கா மகனான சதீஸும் சேர்ந்து கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த மரியசூசை மகன் பெத்தானிஸ் என்பவரை பணம் கொடுக்கல் வாங்கலில் இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டும் செந்தில் மனைவியுடன் தகாத உறவு கொண்டிருந்ததை மனதில் வைத்துக் கொண்டும் 4 மாதத்திற்கு முன்பு தாங்கள் மூவரும் சேர்ந்து பெத்தானீஸை திட்டம் போட்டு தனிமையில் அழைத்துச் சென்று மாலை சுமார் 06.30 மணிக்கு பனங்காடி கிராமத்தைச் சேர்ந்த டீக்கடை மாணிக்கம் என்பவருக்குச் சொந்தமான பட்டா எண்.800ல் உள்ள கிணற்றுக்கு அருகே வைத்து கொலை செய்து கிணற்றுக்குள் போட்டு பின்னர் ஒரு மாதம் கழித்து தீ வைத்துக் கொழுத்தி தடயத்தை அழித்துவிட்டதாக செந்தில் தானாக முன்வந்து சொன்னாரா என்றால் இல்லை. அவ்வாறு செந்தில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை செந்தில், கிராம நிர்வாக உதவியாளர், நானும் கையெழுத்துப் போட்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவதாக உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை ஆய்வாளர் விசாரித்தார் என்றும் அவ்வாறு விசாரணை செய்யும் போது எதிரி செந்தில் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி 10.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தைப் பார்வையிட்டு சம்பவயிடத்தில் கிடந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய குண்டுக்கல்லையும் மறைத்து வைத்திருந்த மண்ணெண்ணெய் கேனையும் எடுத்து செந்தில் ஆஜர் செய்ய ஆய்வாளர் கைப்பற்றி எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து அதில் நாங்கள் கையெழுத்திட்டோம் என்று சொன்னேன் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் இரண்டாவதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. செந்திலை காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு கிடைத்த ரகசிய தகவலின் படி ஆய்வாளருடன் சிவகங்கை காமராஜர் காலனி, பஸ் ஸ்டாண்டில் மதியம் 02.00 மணிக்கு 3வது எதிரியான வெள்ளைச்சாமியை ஆய்வாளர் கைது செய்தார் என்றும் அப்பொழுது வெள்ளைச்சாமி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றும் பின்னர் 05.30 மணியளவில் எதிரி வெள்ளைச்சாமியை நிலையம் கொண்டு

வந்தோம் என்றும் நான் ஆய்வாளர் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் எதிரி வெள்ளைச்சாமி கொடுத்தாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவதாக உள்ளது என்னுடைய கையெழுத்து தான் அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி செந்தில் எங்கள் ஊர்காரர் என்றாலும் அவருடைய தகப்பனார், குடும்பத்தார் எனக்கு பழக்கம் என்று சொன்னாலும் சரிதான். எதிரி வெள்ளைச்சாமியை எனக்கு தெரியாது. எதிரி வெள்ளைச்சாமியை எனக்கு தெரியும் என்றும் எதிரி செந்தில் குடும்பத்தார் எனக்கு பழக்கம் என்பதாலும் அவர்கள் இருவரையும் இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக ஏற்கனவே என்னை காவல் ஆய்வாளர் விசாரிக்கும் போது நடந்த உண்மைகளை வாக்குமூலமாக கொடுத்துவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் கையெழுத்து செய்ததாக சொல்லப்படும் பேப்பர்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று நான் படிக்கவில்லை என்றால் சரிதான். அந்த கையெழுத்துக்கள் என்னிடத்தில் ஊரில் வைத்து பெறப்பட்டது என்றால் சரிதான். அவைகளை தயார் செய்த காவல் அதிகாரிகள் யார் என்ன விபரம் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 3வது எதிரி வெள்ளைச்சாமி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் செந்தில் மற்றும் வெள்ளைச்சாமி ஆகியோர்களை போலீசார் கைது செய்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அத்தாட்சியில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அத்தாட்சியை யார் தயார் செய்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலங்கள், அத்தாட்சி ஆகியவற்றில் என்னைத் தவிர வேறு யார் யார் கையெழுத்து செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அவைகளில் கையெழுத்து செய்யும் போது போலீசார் என்னை விசாரித்தார்கள் அதன் பின்னீடு எப்போதும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.